2023 மார்ச் 27]

சொன்னால், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்திற்கான CUMTA *என்ற அமைப்பின் கூட்டம் நடைபெற்றபோதும்கூட, எங்களுக்கு அந்த அறிவுரையை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், அங்கிருக்கிற போக்குவரத்துக் கழக அலுவலர்கள் பள்ளி நிருவாகத்தோடு கலந்துபேசி, எங்கே தேவையிருக்கிறதோ, அவற்றைப் பூர்த்தி செய்து வருகிறார்கள். கல்லூரிகளிலும் சில நேரங்களில்* shift *முறைகளை மாற்றுகின்றபொழுது நெருக்கடி ஏற்படுவதால், அவற்றை உடனடியாகச் சரிசெய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கோரிக்கையை எழுத்து மூலமாகக் கொடுத்தால், உரிய அலுவலர்களைக்கொண்டு ஆய்வு செய்து, நிச்சயமாக, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

48—

குடமுழுக்கு

***4089—திரு. ஈ. ராஜா:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *குருவிகுளம் ஒன்றியம், சாயமலை அருள்மிகு உமையொருபாகேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சாயமலை அருள்மிகு சிவகாமியம்மாள் சமேத உமையொருபாகேஸ்வரர் திருக்கோயில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருக்கோயில். ரூ.42 இலட்சம் செலவில் உபயதாரர் நிதியோடு 10 பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அதில்

6 பணிகளுக்கு பணியாணை வழங்கப்பட்டிருக்கின்றது. மீதமிருக்கின்ற 4 பணிகளுக்கு விரைவில் பணியாணை வழங்கப்படவுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்தத் திருக்கோயிலினுடைய பாலாலயம் 10–4–2023 அன்று நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, பாலாலயம் எனப்படுகின்ற அந்தத் திருப்பணி துவக்க விழாவில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் பங்கேற்க வேண்டும். 8 மாத காலங்களில் அந்தத் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருவிகுளம் ஒன்றியம், சாயமலையைச் சுற்றியுள்ள சுமார் 30 கிராம மக்களின் வழிபாட்டுத் தலமாக மேலசிவகாமியாபுரத்தில் அமைந்துள்ள பழமையும் பெருமையும் வாய்ந்த அருள்மிகு உமையொருபாகேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்ய ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–55

எனது சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், சங்கரன்கோவிலில் அமைந்துள்ள சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலுக்கு இந்த ஆண்டே குடமுழுக்கு செய்ய ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 மார்ச் 27]

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில் என்பது, ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த பழமையான திருக்கோயில். இந்தத் திருக்கோயிலில் 24 பணிகள், உபயதாரர் நிதிமூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 4 பணிகள், திருக்கோயில் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படவிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக, 6 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் அந்தத் திருக்கோயிலினுடைய திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஓராண்டு காலத்திற்குள் முழுமையாக இந்தத் திருப்பணிகள் நிறைவுற்று, குடமுழுக்கு நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்ற அதேவேளையில், அந்தத் திருக்கோயிலில் ஏற்கெனவே ஓடாதிருந்த தங்க ரதத்தைச் செப்பனிட்டு, விரைவில் தங்க ரத உலா வர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையினை ஏற்று, அந்தத் தங்கரதம் புனரமைக்கப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டு இன்னும் ஓரிரு நாட்களில் வீதி உலா வரவிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தங்கரத வீதி உலாவிலே மகிழ்ச்சியாக பக்தர்களோடுகூடி, தங்கரத வீதி உலாவைக் காண வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கோரிக்கையினை, சட்டமன்ற உறுப்பினராக நிறைவேற்றிக் கொடுப்பேன் என்று இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திருக்கோயிலின்கீழ் இயங்கக்கூடிய ஆவுடையார்கோயில் தெப்பத்தில் வருடந்தோறும் 'தை' மாதத்தில் வெள்ளிக்கிழமையன்று தெப்பத் தேரோட்டம் நடைபெறுவது வழக்கம். ஆனால், தெப்பம் உள்ள இடம், சங்கரன்கோவில் நகர மன்றத்திற்குச் சொந்தமாக உள்ளது. அதனை அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயில் நிருவாகத்தின்கீழ்கொண்டு வர வேண்டும், மேலும், ஆவுடையார் கோயில் தெப்பத்தில் நான்கு சுவர்களும் சிதிலமடைந்து மோசமான நிலையில் உள்ளது. அதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த மாதம் வருகை தந்து, ஆய்வு செய்து பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். கேட்டதையெல்லாம் கொடுக்கக்கூடிய இந்த ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு*

அமைச்சர் அவர்களும் கனிவோடு தெப்பத்தைச் சீரமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு, நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையில் இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களின் கவனத்திற்காக, 1,589 திருக்கோயில்களில், 2,380 திருக்குளங்கள் உள்ளன. அனைத்துத் திருக்குளங்களும் தெப்ப ஒளியில், விழாக் காலங்களில் பளிச்சிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். 2021–2022 ஆம் ஆண்டு சுமார் 37 தெப்பக் குளங்கள், 18 கோடி ரூபாய் செலவிலும், அதேபோல் 2022–2023 ஆம் ஆண்டு சுமார் 40 தெப்பக் குளங்கள், 35 கோடி ரூபாய் செலவிலும்; இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய உத்தரவைப் பெற்று 40 திருக்கோயில்களில், 40 கோடி ரூபாய் செலவிலும் தெப்பக் குளங்களை மேம்படுத்தவிருக்கின்றோம். கடந்த 9–2–2023 அன்று அருள்மிகு சங்கர நாராயண சுவாமி திருக்கோயிலுக்குச் சென்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தத் தெப்பக் குளத்தையும் ஆய்வு செய்தோம். அந்தத் தெப்பக் குளம் வருவாய்த் துறையிடம் இருந்ததால், உடனடியாக துறையினுடைய செயலாளரால் ஆணையாளருக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, திருக்கோயிலின் வசம் உள்ள அந்தத் தெப்பக் குளத்தைச் செப்பனிடுவதற்கு முன்னனுமதியைப் பெற்றிருக்கின்றோம். அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியோடு 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கின்றது. இன்னும் ஒரு மாத காலத்தில் அந்தப் பணி நிறைவு செய்யப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி அடுத்த 'தை' மாதத்தில் அந்தத் தெப்பக் குளத்தில் தெப்பம் விடுகின்ற நல்ல சூழ்நிலையை இந்து சமய அறநிலையத் துறை மேற்கொள்ளும். அதோடு மட்டுமல்லாமல், இந்த ஆட்சி மின்னல் வேக ஆட்சி; மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சி மின்னல் வேகத்தில் பணியாற்றுகிறது என்பதற்கு, இந்தத் தெப்பக் குளப் பணிகளை மேற்கொள்வதே ஒரு சான்றாக இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 மார்ச் 27]

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. த. வேலு அவர்கள்.*

திரு. த. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித குலத்தின் வாழ்வியல் நெறிமுறைகளை இதிகாசங்களாகவும், புராணங்களாகவும் கூறிய காலகட்டத்திற்கு முன்பே, இரண்டே வரிகளில் 1,330 குறட்பாக்களை மனித குலத்திற்கு வழங்கிய மகான், திருக்குறளை இயற்றிய திருவள்ளுவருக்கு, குறிப்பாக, மயிலாப்பூரில் பிறந்ததாகக் கருதப்படும் திருவள்ளுவருக்கு, அந்த இடத்தில் திருக்கோயில் ஒன்று இருக்கிறது. அந்தத் திருக்கோயில் புனரமைக்கப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூரில் அமைந்திருக்கின்ற திருவள்ளுவர் திருக்கோயிலுக்கு என்று ஒரு வரலாறு உண்டு. 1973 ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் இந்தக் கோயிலினுடைய திருப்பணி துவக்கப்பட்டது. அதோடுமட்டுமல்ல, திருவள்ளுவருக்குப் புகழ் சேர்த்த ஓர் ஆட்சி உண்டு என்றால், அது மறைந்த மாண்புமிகு தமிழக முதல்வர், அன்பிற்கினிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியாகத்தான் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) திருவள்ளுவருக்கு வானுயர சிலை அமைத்தது; வள்ளுவர் கோட்டம் அமைத்தது; திருக்குறளுக்கு உரை எழுதியது என்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் இன்றைக்கு ஆட்சி புரிந்து கொண்டிருக்கின்ற 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' அவர்களுடைய ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.10 கோடி செலவில் திருவள்ளுவர் திருக்கோயில் புனரமைக்கப்பட்டு, ஓராண்டிற்குள் குடமுழுக்கு நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2023 மார்ச் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

49—

சுற்றுச் சுவர்

***23088—திரு. செ. கிருஷ்ணமுரளி:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, அச்சன்புதூர் பேரூராட்சி, 5–வது வார்டு, மணக்காடு தவ்ஹீத் பள்ளிவாசலுக்குச் சொந்தமான மையவாடியைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1995 ஆம் ஆண்டு வக்ஃபு சட்டம், பிரிவு 36–ன்கீழ், தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மசூதிகள், மதரசாக்கள், தர்காக்கள் ஆகியவற்றைப் பழுதுபார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் 1999 ஆம் ஆண்டு முதல் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் பெருமராமத்துப் பணி துவக்கப்பட்டு, நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர், மக்கள் முதல்வர் அவர்களால் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 77 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்களால் கேட்கப்பட்டுள்ள கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் வட்டம், அச்சன்புதூர் பேரூராட்சி, வார்டு எண் 5–ல் அமைந்துள்ள மணக்காடு தவ்ஹீத் பள்ளிவாசலுக்குச் சொந்தமான மையவாடி என்ற இடம் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்யப்படாமல் இருக்கிறது. அதற்கு சுற்றுச் சுவர் அமைக்க முடியுமா என்று கேட்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் இந்த இடத்தைப் பதிவு செய்தால், அங்கு சுற்றுச்